செ.வெ.எண்: 626 /2016 நாள்: 10.09.2016

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, மாநிலங்களவை உறுப்பினர் திரு. அ. விஜயகுமார் அவர்கள், கன்னியாகுமரி முதல் பழைய உச்சக்கடை வரை நடைபெற்றுவரும் சாலைப்பணிகளை இன்று (10.09.2016) நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, மாநிலங்களவை உறுப்பினர் திரு. அ. விஜயகுமார் அவர்கள், கன்னியாகுமரி முதல் பழைய உச்சக்கடை வரை ரூ.63.60 கோடி செலவில் சுமார் 71.580 கி.மீ தூரம் நடைபெற்றுவரும் சாலைப்பணிகள் நடைபெற்ற வருகிறது. இதனை மாநிலங்களவை உறுப்பினர் திரு. அ. விஜயகுமார் அவர்கள், 69-வது கி.மீ பகுதியான கொல்லங்கோடு சந்திப்பில் நடைபெற்று கொண்டிருந்த சாலை பணிகளை இன்று (10.09.2016) நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பின்னர் சாலையின் கனத்தை அதிகபடுத்தும் வகையில் 650 மி.மீ அல்லது 25 செ.மீ வெட் மிக்ஸ் மற்றும் மெக்கடம் கலவை சாலையில் போடப்பட்டதை பார்வையிட்டு, பின்னர் இச்சாலையின் தரத்தை ஆய்வு செய்தார்.

அதனை தொடர்ந்து கொல்லங்கோடு பேரூராட்சி, கொல்லங்கோடு முதல் நித்திரவிளை செல்லும் சாலையில் கிராத்தூர் என்ற இடத்தில் பழுது அடைந்த சாலையினை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

ஆய்வின் போது தேசிய நெடுஞ்சாலைத்துறை தலைமை பொறியாளர் திரு.வெங்கட கிருஷ்ணன், கண்காணிப்பு பொறியாளர் திரு.இசக்கி முத்து செல்வன், கோட்டப் பொறியாளர் திரு.தனசேகரன், உதவி கோட்டப்பொறியாளர் பூபதி முத்துராஜ், திரு.ஜீன்ஸ், திரு.ரெஜீஸ்ராஜ், திரு.ராஜாராம், திரு.ஜான், திரு.கனகராஜன், திரு.பார்த்தீ பன், திரு.ஆன்றோ,திரு.ஜான் அலோசியஸ், திருமதி லிஸி, திருமதி.மேரி கமலாபாய், திரு.ராஜன் ஆகியோர் உடனிருந்தனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.